கல்லறை கடவுளை கை தொழும் போது
கண்கள் கங்கை ஆகிறதே
கார்த்திகை பூக்கள் ஊயிர் தொடும்  போது
சூரிய கனவுகள் விடிகிறதே

மாவீரரே உங்கள் திருக்கோவிலில்
மணியோசை உறவுகள் அழுகை சத்தம்
மரணத்தை தாண்டிய கள வாழ்விலே
இனிதான தமிழீழம் உரிமை யுத்தம்
இனிதான தமிழீழம் உரிமை யுத்தம்

மண்ணுக்குள் உங்கள் தேசிய மனசு
தெய்வீகம் வீசுது மாவீரரே
கண்ணுக்குள் உங்கள் காவியம் எழுத
கார்த்திகை கரையுது மாவீரரே
பாதை எங்கும் தேடுகிறோம்
கேட்கும் இசை மாவீரரே
பாதச்சத்தம் இன்னும் எங்கள்
நெஞ்சின் ஓசை மாவீரரே
விழிகள் கரையும் பொழுதில்
தீபங்கள் ஆயிரம் பூ முகங்கள்

பாசறை வாழ்வில் தாய் மனம் போல
உங்களின் இதயம் மாவீரரே
படை எடுத்தாடி பகையுடன் மோதி
எங்களை காத்தவர் மாவீரரே
பூக்கள் அள்ளி துாவுகிறோம்
கொஞ்சும் தமிழ் மாவீரரே
வீர நெஞ்சை தாங்குகிறோம்
எங்கள் களம் மாவீரரே
முழையில் ஒருநாள் எழுதும்
ஈழத்தின் விடிவைத் தீ யுகங்கள்